19.10.2022 .ம.சா 1 சேர்மராஜா Mcop 32 of 2021

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் தரப்பில் குறுக்குவிசாரணை

என் வயது, வருமானம் மற்றும் வேலையை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல்துறையில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கார் குறுக்காக வந்து விட்டது. கார் குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது. என் பின்னால் வந்த அரசு பேரூந்துக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. இந்த விபத்திற்கு என் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. நான் தான் முன்னால் சென்ற வாகனத்தின் பின்புறத்தில் இடித்து திடீரென வலதுபுறம் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கவனத்துடன் சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. என் அதிவேகமும் அஜாக்கிரதையும் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. என் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ பில்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மற்றும் வட்டி அதிகமானது என்றால் சரியல்ல. எனக்கு ஏதாவது இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் 1,2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே தான் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும், 3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.